RNI-NO: TNTAM/2021/83936




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING www.malaithanthi.in மாலை நாளிதழ்

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




சிவகங்கை | மலர்-4 | இதழ்- 365 | ஜனவரி.4 2026 ஞாயிற்றுக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

## “போராடும் இடைநிலை ஆசிரியர்களை கைவிட மாட்டோம்” அமைச்சர் அன்பில் மகேஸ் உறுதி



சென்னை, ஜன.4-

“போராட்டத்தில் ஈடுபட்டுள்ள இடைநிலை ஆசிரியர்களை கைவிட மாட்டோம். நல்ல முடிவு எடுப்போம்” என அமைச்சர் அன்பில் மகேஸ் உறுதியளித்துள்ளார்.

சம வேலைக்கு சம ஊதியம் கோரிக்கையை முன்வைத்து இடைநிலை பதிவுமூப்பு ஆசிரியர் இயக்கம் (எஸ்எஸ்டிஏ) சார்பில் சென்னையில் டிச.26 முதல் தொடர் போராட்டம் நடத்தப்பட்டு வருகிறது. இதனையொட்டி, இது குறித்து முதல்வர் ஸ்டாலின், அமைச்சர் அன்பில் மகேஸ் உள்ளிட்டோர் முக்கிய ஆலோசனை நடத்தி வருகின்றனர்.

இந்நிலையில், அமைச்சர் அன்பில் மகேஸ் சென்னையில் இன்று செய்தியாளர்களிடம் பேசும்போது, “போராட்டத்தில் ஈடுபட்டுள்ள இடைநிலை ஆசிரியர்கள் என்னுடைய குடும்ப உறுப்பினர்களை போன்றவர்கள். அவர்களை நாங்கள் கைவிட மாட்டோம்.

நாங்கள் ஒரு கட்டத்தில் நிற்கிறோம். போராட்டம் நடத்துபவர்கள் ஒரு கட்டத்தில் இருக்கிறார்கள். நல்ல முடிவை எடுப்போம் என்ற நம்பிக்கை இருக்கிறது. இதை போராட்டமாகவோ, ஆர்ப்பாட்டமாகவோ நான் பார்க்கவில்லை. தங்கள் உணர்வுகளை வெளிப்படுத்தும் விதமாகவே ஆசிரியர்கள் போராடுகிறார்கள்” என்று அவர் தெரிவித்துள்ளார்.

முன்னதாக, “போராட்டம் குறித்து எஸ்எஸ்டிஏ பொதுச் செயலாளர் ஜே. ராபர்ட் கூறும்போது, “ஒற்றை கோரிக்கையை வலியுறுத்தி போராடி வருகிறோம். கடந்த தேர்தலின் போது எங்கள் கோரிக்கையை ஏற்ற திமுக, அதை தேர்தல் வாக்குறுதியாகவும் அறிவித்தது. ஆனால், இதுவரை நிறைவேற்றவில்லை. ஊதிய முரண்பாடு களையப்படாவிட்டால், பள்ளிகள் திறந்த பிறகும் போராட்டம் தொடரும். தமிழக அரசு எங்களை அழைத்துப் பேசி கோரிக்கையை நிறைவேற்ற வேண்டும்” என்றார்.



■ சிவகங்கை மாவட்டம் இளையான்குடி வடக்கு ஒன்றிய திமுக சார்பில் திமுக சாதனை விளக்க துண்டு பிரசுரங்கள் நேற்று (ஜன03) அண்டக்குடி, இளமனூர், நகரகுடி, ஆழி மதுரை ஊராட்சிகளில் ஒன்றிய செயலாளர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் சுப.மதியரசன் தலைமையில் வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் ஒன்றிய துணை செயலாளர் சிவனேசன் மானாமதுரை தொகுதி தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் கண்ணன் ஒன்றிய விவசாய அணி அமைப்பாளர் நீலமேகம் ஒன்றிய இளைஞர் அணி துணை அமைப்பாளர் மணி, துரைமுருகன் உள்ளிட்ட நிர்வாகிகள் உடனிருந்தனர்.



## சிவகங்கையில் வானவில் மன்ற மீளாய்வுக் கூட்டம்



சிவகங்கை ஜன.4

சிவகங்கை மருதுபாண்டியர் நகர் ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வித் துறையின் கூட்டரங்கில் டிசம்பர் 2025 வேலை அறிக்கை சமர்ப்பிக்கும் மீளாய்வுக் கூட்டம் மற்றும் பயிற்சி நடைபெற்றது. வானவில் மன்றக் கருத்தாளர் ஜெனிட்டா வரவேற்றார். சிவகங்கை மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் பாலதண்டாயுதபாணி வழிகாட்டுதலின்படி மாவட்டக் கல்வி அலுவலர் (தனியார் பள்ளிகள்) வடிவேல் தலைமை வகித்தார். பள்ளிக் கல்வித்துறை மாவட்ட ஒருங்கிணைப்பாளர் சகாய பிரிட்டோ அறிமுகவுரையாற்றினார். அமைப்புசார் வானவில் மன்ற ஒருங்கிணைப்பாளர் மாலா பயிற்சியை ஒருங்கிணைப்பு செய்து முக்கிய தகவல்களைக் கூறினார். முதன்மைக் கருத்தாளர் இணை ஒருங்கிணைப்பாளர் ஆரோக்கியசாமி வானவில் மன்றக் கருத்தாளர்களின் கடமைகள் குறித்தும் ஆய்வு அறிக்கையை செழுமைப்படுத்துவது குறித்தும் கூறினார். அனைத்து அரசு மேல்நிலை உயர்நிலை நடுநிலை பள்ளிகளில் தமிழ்நாடு அறிவியல் இயக்கத்தின் வருடாந்திர நாட்காட்டி வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. வருடம் முழுவதும் சர்வதேச பெண் விவசாயிகள் ஆண்டையும் சர்வதேச நீடித்த வளர்ச்சிக்கான தன்னார்வலர்கள் ஆண்டை எடுத்து செல்ல அனைவருக்கும் வருடாந்திர நாட்காட்டி வழங்கப்பட்டது. வேலை அறிக்கை முன் பயண அட்டவணை மற்றும் வேலை அறிக்கை தொகுப்பு போன்ற படிவங்கள் ஒப்படைக்கப்பட்டது.

எளிய மின்சுற்று பக்க இணைப்பு தொடர் இணைப்பு வீட்டில் தாமிர பொருட்கள் மற்றும் உலோகங்களை சுத்தம் செய்தல் மண் அடுக்குகள் மற்றும் தண்ணீர் ஊடு பாய்தல் சோதனை சதுரம் செவ்வகத்தின் பரப்பளவு மற்றும் சுற்றளவு கூட்டு வடிவங்களின் பரப்பளவு மற்றும் சுற்றளவு காணல் குறித்த அறிவியல் மற்றும் கணித செய்முறை பயிற்சி வழங்கப்பட்டது.

தமிழ்நாடு அறிவியல் இயக்க சிவகங்கை மாவட்டச் செயலாளர் பிரபு சிவகங்கை கிளைத் தலைவர் எமணவாளன் வாழ்த்துரை வழங்கினர். வானவில் கருத்தாளர் ஏங்கல்ஸ் நன்றி கூறினார்.

# காவலர்கள் மக்களின் நண்பன் என்பதை நிரூபியுங்கள்



சென்னை: ஜன.4

''போலீஸ் பொதுமக்களின் நண்பன் என்று சொல்வது வெறும் வார்த்தையாக இல்லாமல், உண்மை என்று நிரூபிக்க வேண்டும்,'' என முதல்வர் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சென்னை கோட்டூர்புரத்தில் சீருடைப் பணியாளர்களுக்கு பணி நியமன ஆணைகளை முதல்வர் ஸ்டாலின் வழங்கினார். நிகழ்ச்சியில் அவர் பேசியதாவது:

போலீஸ் வேலையில் சேர வேண்டும் என்ற உங்களது கனவும், முயற்சியும், உழைப்பும் சேர்ந்து தான் உங்களை பணியில் சேர வைத்துள்ளது. இனிமேல்தான் உங்களுக்கு பொறுப்பும், சமூக கடமையும் அதிகமாக இருப்பதை அனைவரும் உணர வேண்டும். போலீஸ் இருக்காங்க; அவங்க நம்மை பார்த்துக்குவாங்க என்ற நம்பிக்கையில் தான் மக்கள் வாழ்கிறார்கள்.

இரவு நேரங்களிலும் பெண்கள் பாதுகாப்பாக வேலைக்கு சென்று வருகிறார்கள். தமிழகம் பாதுகாப்பான மாநிலம்; அமைதிப் பூங்கா என இந்தியா முழுவதும் எல்லோரும் சொல்கிறார்கள்.

இந்தியாவிலேயே முதலீடுகளை மேற்கொள்ள சிறந்த மாநிலமாக தமிழகம் இருப்பதால், உலகளாவிய பெரும் நிறுவனங்கள் தமிழகத்தை நாடி வருகின்றன. அந்த நம்பிக்கையை நாம் தொடர்ந்து காப்பாற்ற வேண்டும். தமிழகத்தின் எதிர்காலம் போலீஸ் துறையில் பணியாற்றுவர்களின் கைகளின் தான் உள்ளது என்ற பொறுப்புணர்வு , உங்கள் ஒவ்வொருவருக்கும் இருக்க வேண்டும்.

போலீஸ் பணி மனித நேயத்துடன் இணைந்தது. வீரத்தின் அடித்தளம் ஏது தெரியுமா? அன்பு தான். இன்னொரு பக்கம் எங்கேயோ ஒரு போலீஸ் தவறு செய்தாலும் ஒட்டுமொத்த துறையின் மீது மக்கள் வைத்திருக்கும் நம்பிக்கையை பாதிக்கும். அதனை உணர்ந்து நீங்கள் ஒவ்வொரு வரும் கவனமாக செயல்பட வேண்டும். நீங்கள் செயல்படுவீர்கள் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன்.

போலீஸ் பொதுமக்களின் நண்பன் என்று சொல்வது வெறும் வார்த்தையாக இல்லாமல், வெறும் வாசகங்களாக இல்லாமல், உண்மையில் அதனை நிருபிக்க வேண்டும். போலீசார் அனைவரும் மக்களிடம் கனிவாக நடந்து கொள்ளுங்கள். உங்கள் உறுதி செய்கிற வேலையில் தெரிய வேண்டும்.

இரும்பு கரத்தை குற்றங்களை தடுப்பதற்கு பயன்படுத்த வேண்டும். புகார் கொடுக்க வருபவர்களிடம் மரியாதை, புன்னகை, அக்கறையை காண்பிக்க வேண்டும். இந்த குணங்களை காட்டுங்கள். குறிப்பாக பெண்கள், குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களை விசாரிக்கும் போது, மிகவும் ஜாக்கிரதையாக கையாள வேண்டும்.

இந்த துறைக்கு பொறுப்பு வகிக்கும் முதல்வராக, இது என்னுடைய கோரிக்கை மட்டுமல்ல, 100 சதவீதம் நீங்கள் கடைபிடிக்க வேண்டிய உத்தரவு. அதேபோல், போதைப்பொருட்கள் நடமாட்டம், அதன் விற்பனையை தடுப்பதிலும் நடவடிக்கை எடுக்க வேண்டும். உங்கள் எல்லோரு வீட்டிலும் குழந்தை இருப்பார்கள்.

யார் பாதிக்கப்பட்டாலும் போதையின் ஆபத்து நம்ம வீட்டு குழந்தைகளையும் பாதிக்கும் என்பதை உணர்ந்து நீங்கள் செயல்பட வேண்டும். நான் இன்சார்ஜ ஆக இருக்க கூடிய பகுதியில், என்னை மீறி ஒரு குற்றச்சம்பவங்களையும் நடக்க விட மாட்டேன் என்று நீங்கள் ஒவ்வொரும் தீர்மானம் எடுத்து கொள்ள வேண்டும். இவ்வாறு முதல்வர் ஸ்டாலின் பேசினார்.

## சிவகங்கை மாவட்ட திமுக விவசாய அணி சார்பில் அமைச்சர் பெரியகருப்பன் பிறந்தநாள் விழா



திருப்புவனம் ஜன.04

சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் அருகே உள்ள மடப்புரத்தில் தமிழ்நாடு கூட்டுறவுத் துறை அமைச்சர், சிவகங்கை திமுக மாவட்டக்கழக செயலாளர் கேஆர். பெரியகருப்பன் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு சிவகங்கை மாவட்ட திமுக விவசாய அணி சார்பில் மடப்புரம் அருள்மிகு அடைக்கலம் காத்த அய்யனார் , அருள்மிகு பத்ரகாளியம்மன் கோவிலில் பக்தர்கள் மற்றும் பொதுமக்களுக்கு இனிப்பு மற்றும் அன்னதானம் வழங்கி கொண்டாடப்பட்டது.

இதனிடையே மடப்புரம் கோவிலில் அமைச்சர் பெரியகருப்பன் நீடுழி வாழ வேண்டுமென தங்கத் தேர்பல்லாக்கு இழுக்கப்பட்டது...

இந்த நிகழ்ச்சியில் சிவகங்கை திமுக விவசாய அணி மாவட்ட துணைத்தலைவர் சொக்கனாதிருப்பு டி. ஆர். சேகர், மாவட்ட துணை அமைப்பாளர் அச்சங்குளம் கு. முருகன் ஆகியோரது ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் திருப்புவனம் கிழக்கு ஒன்றிய செயலாளர் ஏனாதி எம். எ. கடம்பசாமி முன்னிலை வகித்தார்...

இந்த நிகழ்ச்சியில் மாவட்ட தொழிலாளரணி பூவந்தி பன்னீர்செல்வம், முனைவர் இளங்கோவன், மாவட்ட தொழிலாளரணி திருப்பாச்சேத்தி காத்தமுத்து , பூவந்தி ஊராட்சி மேனாள் தலைவர் ஆறுமுகம், ஒன்றிய இளைஞரணி வழக்கறிஞர் அஜீத்குமார் , ஒன்றிய மாணவரணி யோகேஷ் அம்பலம், மடப்புரம் நாட்டாமை அப்பாச்சாமி, கேஆர்பி யாரின் முரட்டு பக்தன் , ஆலங்குளம் வழக்கறிஞர் தங்கம் பாலமுருகன், திருப்பாச்சேத்தி நல்லமணி முத்துராஜா, மடப்புரம் சுப்பிரமணி உள்ளிட்ட பொதுமக்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சி ஏற்பாடுகளை சிவகங்கை திமுக மாவட்ட விவசாய அணி துணைத்தலைவர் சொக்கனாதிருப்பு டி. ஆர். சேகர் ,மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர் அச்சங்குளம் கு.முருகன் ஆகியோர் சிறப்பாக செய்திருந்தனர்...

## காளையார்கோவில் துணை முதலமைச்சர் உதயநிதி பிறந்தநாள் முன்னிட்டு வடக்கு ஒன்றியம் கீழக்கோட்டையில் திமுக கொடியேற்றப்பட்டது



காளையார் கோவில், ஜன.04

சிவகங்கை மாவட்டம் காளையார்கோவில் வடக்கு ஒன்றிய திமுக சார்பில் சொக்கனாதபுரம் அருகேயுள்ள கீழக்கோட்டையில் கழக இரு வண்ணக் கொடியேற்றி வைத்து பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டது...

காளையார்கோவில் வடக்கு ஒன்றியப் பொருளாளர் கீழக்கோட்டை கண்ணன் ஏற்பாட்டில் திமுக தலைமைப் பொதுக்குழு உறுப்பினர் பாகை வாள்கோட்டை நாடு பி. டி. ஆர். முத்து , ஒன்றிய அவைத்தலைவர் சுப.தமிழரசன் ஆகியோரது முன்னிலையில் காளையார்கோவில் வடக்கு ஒன்றியக்கழக செயலாளர் ஆர். எம். கென்னடி அவர்கள் கழக இருவண்ணக் கொடியை ஏற்றிவைத்து பொதுமக்களுக்கு இனிப்புகளை வழங்கி சிறப்புரை நிகழ்த்தினார்...

இந்த நிகழ்ச்சியில் கழக மூத்த முன்னோடி, மாவட்ட பிரதிநிதி ரைஸ்மில் கணேசன் , ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் சக்திதாசன் , கீரனூர் தமிழ்ச்செல்வம் , கிளைக்கழக செயலாளர்கள் சுந்தரம் , பாகனேரி சண்முகம் , கீழக்கோட்டை சுப. தமிழரசன் , கிளைப் பொருளாளர் நித்யானந்தம் , சேது , சுப்பு , பழனிச்சாமி , கணேசன் , ஒன்றிய ஐடி விங் சுசீந்திரன் , கருப்பையா , சந்திரன் , முருகன் உள்ளிட்ட ஒன்றிய, கிளைக்கழக நிர்வாகிகள், பொதுமக்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்...

நிகழ்ச்சி ஏற்பாடுகளை காளையார்கோவில் வடக்கு ஒன்றிய திமுக பொருளாளர் கீழக்கோட்டை கண்ணன் சிறப்பாகச் செய்திருந்தார்...



# புத்தகங்கள் வெளியிட்டு படைப்பாளர்களுக்கு பாராட்டு விழா.

தேனி ஜன. 04-

தேனி நாடார் சரசுவதி ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற நான்காவது புத்தகத் திருவிழாவில் தேனி மாவட்ட எழுத்தாளர்களின் புத்தகங்கள் வெளியிடப்பட்டு படைப்பாளர்களை பாராட்டினார்கள் இந்நிகழ்வில் தேனி கோடாங்கிபட்டி யைச் சார்ந்த கவிஞர் பா.அரிய காமுத்துரை முதல் படைப்பான களவாடிய கனவுகள் என்னும் கவிதை நூலை மாவட்ட நூலக அலுவலர் சரவணக்குமார் வெளி யிட சின்னமனூர் வாசகர் வட்ட தலைவர் முனைவர் மனோகரன் புத்தகங்களை பெற்றுக்கொண்டார் இந்நூலினை இராணுவ வீரர் கவிஞர் வினோத் பரமானந்தன் மதிப்புரை செய்து பெருமைப்படுதினார் நூல் ஆசிரியர் கவிஞர் பா.அரிய காமுத்துரை ஏற்புரையாற்றினார் புலவர் ச.ந. இளங்குமரன் நிகழ்சியை தொகுத்து வழங்கினார்கள்.



# முன்னாள் முதலமைச்சர் ஓ பன்னீர்செல்வம் போடியில் செய்தியாளர் சந்திப்பு

போடி. ஜன 04-

தேனி மாவட்டம் போடிநாயக்கனூரில் உள்ள சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் முன்னாள் முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் இன்று செய்தியாளர்களை சந்தித்து பேசினார்

அப்போது பேசிய அவர் என்.டி.ஏ கூட்டணியில் இருந்து நாங்கள் வெளியே வந்து விட்டோம், உள்துறை அமைச்சர் அமித்ஷா தன்னை அழைத்தபோது தமிழகத்தின் அரசியல் நிலவரம் குறித்து தெரி வித்து வந்தேன்

எங்களைப் பொறுத்தவரையில் அதிமுகவில் பிரிந்து இருக்கின்ற அனைவரும் ஒன்றிணைய வேண்டும் அப்போது தான் மீண்டும் ஆட்சி அமைக்க முடியும்

எம்ஜிஆர் உருவாக்கிய சட்ட விதிகளின்படி தான் எம்ஜிஆர், ஜெயலலிதா செயல்பட்டார்கள் அந்த சட்ட விதிகளை தற்போது கேள்விக்கு றியாக்கியுள்ளார்கள்

அதிமுக பொதுச்செயலாளரை அடிப்படை தொண்டர்கள் வாக்களித்து தேர்வு மூலம் தேர்வு செய்ய படவேண்டும் என்பதே சட்ட விதி அது இன்று மாற்றி அமைக்கப்பட்டுள்ளது

அந்த சட்ட விதிகளை மீண்டும் செயல்படுத்த வலியுறுத்தி தான் நாங்கள் உச்ச நீதிமன்றம் வரை சென்று போராடி இருக்கிறோம்

எம்ஜிஆர் உருவாக்கிய சட்ட விதிகளை காப்பாற்றுவதற்கு எங்களது சட்டப் போராட்டம் தொடர்ந்து நடைபெறும்

எம்ஜிஆர் தமிழகத்திற்கு செய்த புகழை மறைக்கும் செயல்களில் யார் ஈடுபட்டாலும் அது கடும் கண்டனத்துக்குரியது

தவறு செய்தவர்களுக்கு தமிழக மக்களும் அதிமுக தொண்டர்களும் சரியான பாடம் புகட்டுவார்கள் என்று தெரிவித்தார்

மேலும் சட்டமன்ற தேர்தல் கூட்டணி குறித்த கேள்விக்கு தை பிறந்தால் வழி பிறக்கும் என்று பதில் அளித்துச் சென்றார்

# அதிமுக தேர்தல் அறிக்கை குழுவினர் சுற்றுப் பயணம்; இபிஎஸ் அறிவிப்பு

சென்னை:, ஜன.4-

அதிமுக தேர்தல் அறிக்கை குழுவினர் மண்டல வாரியாக ஜனவரி 7 முதல் ஜனவரி 20 வரை மாநிலம் தழுவிய சுற்றுப்பயணம் செல்ல உள்ளதாக அக்கட்சி பொதுச் செயலாளர் இ பி எஸ் அறிவித்துள்ளார்.



இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறி யிருப்பதாவது: தமிழக மக்களின் நலனையும், முன்னேற்றத்தையும் முன்னிலைப்படுத்தும் வகையில், பல்வேறு தரப்பு மக்களைச் சந்தித்து தரவுகளை சேகரித்து, ஆகச் சிறந்த தேர்தல் அறிக்கையினை தயாரிக்கும் பொருட்டு, அதிமுக தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழுவினர் தமிழகம் முழுவதும், வரும் ஜனவரி 7ம் தேதி முதல் ஜனவரி 20ம் தேதி வரை 9 மண்டலங்களுக்கு சுற்றுப் பயணம் மேற்கொள்ள உள்ளார்கள்.

* ஜனவரி 7ம் தேதி வேலூர் திருப்பத்தூர் ராணிப்பேட்டை திருவண்ணாமலை, சேலம் நாமக்கல் தருமபுரி கிருஷ்ணகிரி.

* ஜனவரி 8ம் தேதி விழுப்புரம், கடலூர், கள்ளக்குறிச்சி, திருச்சி, பெரம்பலூர், அரியலூர், கரூர், புதுக்கோட்டை.

* ஜனவரி 9ம் தேதி தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர், மயிலாடுதுறை, விருதுநகர், சிவகங்கை ராமநாதபுரம்.

* ஜனவரி 11ம் தேதி மதுரை, தேனி, திண்டுக்கல், திருநெல்வேலி, தென்காசி, தூத்துக்குடி, கன்னியாகுமரி.

* ஜனவரி 19ம் தேதி கோவை, திருப்பூர், ஈரோடு, நீலகிரி.

* ஜனவரி 20ம் தேதி சென்னை, காஞ் சிபுரம், செங்கல்பட்டு, திருவள்ளூர்.

தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழுவினருக்கு முழு ஒத்துழைப்பு நல்கிட வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு இபிஎஸ் கூறியுள்ளார்.

# வசந்தம் மாற்றுத்திறனாளிகள் கூட்டமைப்பு வில்லிவாக்க ஒன்றியம் நடத்திய சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தின விழா



, சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தின விழாவை முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் டாக்டர்.ஏ.பிரபாகரன் தலைமை தாங்கினார். வசந்தம் மாற்றுத்திறனாளி கூட்டமைப்பு ஒன்றிய தலைவரும், போலீஸ் பார்வை முதன்மை ஆசிரியர் டாக்டர் எஸ்.முருகானந்தம் என்கின்ற (நந்தா) இவரது முன்னிலையில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியை திட்ட மேலாளர் ஜே.சூசை ராஜ் நிகழ்ச்சி தொகுத்து வழங்கினார். 400க்கும் மேற்பட்ட மாற்றுத்திறனாளிகளுக்கு டி. இனிப்பு. காரம், கேக் கூல்ட்ரிங்ஸ் மதிய உணவு, பரிசுப் பொருள் டிபன் பாக்ஸ் ஆகியவற்றை கலந்து கொண்ட மாற்றுத்திறனாளிகளுக்கு வழங்கப்பட்டது.

மாற்றுத்திறனாளிகள் பரதநாட்டியம் டான்ஸ் பாடல்கள் இடம்பெற்றது

இதில் சிறப்பு அழைப்பாளர்களாக திமுக தலைமைக் கழக பேச்சாளர் காமு ஜான், வட்டார வளர்ச்சி தனி அலுவலர் டி. ராமகிருஷ்ணன், மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர் ஜி. ரவி, ஊராட்சி செயலர் எம். தமிழ்ச்செல்வன், வருவாய் ஆய்வாளர் ஆர்.சரண்யா, சரக விவோகள் (எம்.குமார் கே.மஹாகராஜன் சி.கலையரசன்,) கே.கேசவன், (ஆனந்தன் நிஷிழிலி எ. இ).ஜானகிராமன், வெங்கட் மதுசூதனன், சௌமியா மற்றும் வசந்த மாற்றத்திறனாளிகளின் கூட்டமைப்பு மாவட்ட நிர்வாகிகள் மாவட்டத் தலைவர் ஏ.லிவிங்ஸ்டன், மாவட்டச் செயலாளர் ஆனந்தி, மாவட்ட பொருளாளர் ஜெயச்சந்திரன், ஜி.முருகன் தேசய்யா, பரந்தாமன், மோகனா கிளாரா, ஒன்றிய பொருளாளர் சரஸ்வதி, செயற்குழு உறுப்பினர்கள் ராஜேந்திரன், ரஜினி, விஜயன், ஒன்றிய பணியாளர்கள் சிங்கப்பெண்கள் மீனாட்சி, ஜானகி,லட்சுமி, ஜெரினா, நன்றியுரை ஆற்றிய தாவூத் மற்றும் அன்சாரி சதீஷ் விழாவை சிறப்பித்தனர்,






# பழனி அருகே தவெக சார்பாக வேலுநாச்சியார் கட்டபொம்மன் பிறந்த நாள் விழா.

திண்டுக்கல், ஜன.4-

திண்டுக்கல் மாவட்டம் பழனி அடுத்த பச்சளநாயக்கன்பட்டியில் தமிழக வெற்றிக் கழகம் சார்பாக வேலுநாச்சியாரின் 296 வது பிறந்தநாள் மற்றும் வீரபாண்டிய கட்டபொம்மனின் 267ஆவது பிறந்த நாளை முன்னிட்டு தமிழக வெற்றி கழகத்தின் தகவல் தொழில்நுட்ப பிரிவு நிர்வாகி இராமகிருஷ்ணன் தலைமையில் கட்டபொம்மன் மற்றும் வேலு நாச்சியாரின் திருவுருபடத்துக்கு மலர்களால் அலங்கரிக்கப்பட்டு மாலை அணிவித்து மலர் தூவி பிறந்தநாள் விழா நிகழ்ச்சி நடைபெற்றன.

இந்நிகழ்வின் சிறப்பு அழைப்பாளராக மாவட்ட செயற்குழு உறுப்பினர் பாலன் மாவட்ட இணை செயலாளர் சிவா, நகர செயலாளர் மிதுன் மாவட்ட இளைஞரணி செயலாளர் நாகராஜ் ஆகியோர் கலந்து கொண்டு விழா நிகழ்ச்சி நடைபெற்றன.

தொடர்ந்து இந்நிகழ்வில் அஜித்குமார் மதன், மகேஸ்வரன், தினேஷ்குமார், விக்னேஷ் உள்ளிட்ட 50க்கும் மேற்பட்ட கட்சி நிர்வாகிகள் மற்றும் மகளிர் அணியைச் சேர்ந்த பொறுப்பாளர்கள் கலந்து கொண்டு வீரபாண்டிய கட்டபொம்மன் மற்றும் வேலுநாச்சியாரின் திருவுருவ படத்திற்க்கு மாலை அணிவித்து மலர் தூவி பிறந்தநாள் விழா நிகழ்ச்சி நடைபெற்றன



■ புதுக்கோட்டை மாவட்டம் கறம்பக்குடி தாலுகா வெள்ளாள விடுதி கிராமத்தில் இந்து சமய அறநிலை துறை அருள்மிகு ஸ்ரீ அகத்தீஸ்வரர் ஆலய புறநானமைப்பு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மு க ஸ்டாலின் அவர்கள் 2.53 கோடிஅடிக்கல் நாட்டு விழா காணொளி வாயிலாக தொடங்கி வைக்க உள்ளார் மாண்புமிகு அமைச்சர் எஸ் ரகுபதி கனிமவளத்துறை மாண்புமிகு அமைச்சர் மெய்ய நாதன் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை மாவட்ட ஆட்சியர் அருணா ஐஏஎஸ் இந்து சமய அறநிலைத்துறை அதிகாரிகள் மாவட்ட நிர்வாகிகள் ஒன்றிய நிர்வாகிகள் ஊர் பொதுமக்கள்




# சிவகங்கை மாவட்ட மைய நூலகத்தில் நடந்த நிகழ்வில்!

சிவகங்கை, ஜன.4-

மனித உறவுகள் மேம்பட வாழ்க்கை தத்துவங்கள் நிறைந்த வெண்மை மாத இதழைதொடர்ந்து சிவகங்கை மாவட்டஅனைத்து நூலகங்களுக்கும் இலவசமாக ராமராஜ் காட்டன் நிறுவனத்தார் வழங்கி வருகின்றனர். புத்தாண்டை முன்னிட்டுதமிழ்நாடு அரசின் சிறந்தநாடக நூல் விருதாளர் "கலை நன்மணி!"எழுத்தாளர்

அ. ஈஸ்வரன்மாவட்ட மைய நூலகர் வெங்கடவேல் பாண்டி அவர்கள் "வெண்மை" மாத இதழ்! மற்றும் நாள்காட்டி வழங்கி கௌரவிக்கப்பட்டது. மேலும் நூலகத்தில்அரசு பொதுத்தேர்வுக்காக படித்து வரும் மாணவ மாணவர்களுக்காக கழிப்பறைமராமத்து பணி நூலக நண்பர்கள் திட்டம் மற்றும் நூலக வாசகர் வட்டம் சார்பாக.நடைபெற்று வருகிறது

விரைவில் அந்தப் பணியை முடிவடைய செய்து மாணவ மாணவிகளுக்கு பயன்பாட்டுக்கு கொண்டு வர வேண்டும் என்றுமுடிவு செய்யப்பட்டது

# கிறிஸ்துமஸ் தினதன்று நாடு முழுவதும் 700 இடங்களில் கிறிஸ்வர்கள், தேவாலையங்கள் மீது தாக்கியதை கண்டித்துகிறிஸ்தவ பாதிரியார்கள் என 500 க்கும் மேற்பட்டவர்கள் கண்டன ஆர்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்

தாம்பரம் ஜன 4-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் சண்முகா சாலையில் நடைபெற்றகிறிஸ்துமஸ் தினத்தன்று நாடு முழுவதும் 700 இடங்களில் கிறிஸ்தவர்கள் மீது தாக்குதல் நடத்திதை கண்டித்தும், தேவாலையங்கள் மீது தாக்குதல் நடத்திய மதவெறி கும்பலை கண்டித்து செங்கல்பட்டு வடக்கு மாவட்ட மனிதநேய மக்கள் கட்சி சார்பில் மாவட்ட தலைவர் ஜாஹிர் உசேன் தலைமையில் தாம்பரம் சண்முக சாலையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றதுஇந்த ஆர்ப்பாட்டத்தில் சிறப்பு




அழைப்பாளராக மனித நேய மக்கள் கட்சி மாநில துணை பொதுச் செயலாளர் யாக்கூப், விடுதலை சிறுத்தை கட்சி துணை பொது செயலாளர் வன்னியரசு அவர்கள் கலந்து கண்டன உரை ஆற்றினர்.

இதில் காங்கிரஸ் மாவட்ட தலைவர் செந்தில்குமார் விசிக மாவட்ட செயலாளர் சாமுவேல் எபினேசர், மற்றும் காங்கிரஸ், மதிமுக, கம்யூனிஸ்ட் கட்சியினர் கூட்டணி கட்சியினர் கிறிஸ்தவ தேவாலையத்தை சேர்ந்த பாதிரியார்கள் பெண்கள் என 500க்கும் மேற்பட்டவர்கள் ஒன்றிய பாஜக அரசை கண்டித்து ஆர்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்,



# திமுக அரசு எப்போதும் உண்மையாக இருக்கும்; முதல்வர் ஸ்டாலின் பெருமிதம்

சென்னை, ஜன.4-

அரசு ஊழியர்கள் ஆசிரியர்களின் 20 ஆண்டுகால கோரிக்கையை திமுக நிறைவேற்றியுள்ளது. அரசு எப்போதுமே உண்மையாக இருக்கும் என மீண்டுமொருமுறை செய்து காட்டியுள்ளோம் என முதல்வர் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இது குறித்து முதல்வர் ஸ்டாலின் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: அரசு அலுவலர்கள், ஆசிரியர்களுக்கு புதிய தமிழ்நாடு உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியம் (டி.ஏ.பி.எஸ்.,) திட்டம் அறிவித்து 20 ஆண்டுகாலக் கோரிக்கையை திராவிட மாடல் அரசு நிறைவேற்றி உள்ளது.

நம்பி ஓட்டளித்த மக்களுக்கு, திமுக அரசு எப்போதுமே உண்மையாக இருக்கும் என மீண்டுமொருமுறை செய்து காட்டியுள்ளோம். அரசு ஊழியர்களுக்கு மிகப் பெரும் புத்தாண்டு, பொங்கல் பரிசாக டி.ஏ.பி.எஸ்., அறிவிப்பினை வெளியிட்டுள்ளோம்.

திராவிட மாடல் நல்லாட்சிதான் தொடரும். தலைநிமிர்ந்து வரும் தமிழகத்தின் நிதிநிலை சீரடையச் சீரடைய அனைத்துத் தரப்பினரின் கோரிக்கைகளும் நீங்கள் கேட்காமலே நிறைவேறும். இவ்வாறு முதல்வர் ஸ்டாலின் கூறியுள்ளார்.

# விருதுநகர் மாவட்ட காவல் துறை 2025 ஆண்டு குற்றத் தடுப்பு மற்றும் நடவடிக்கை அறிக்கை வெளியீடு

விருதுநகர் ஜன04-

விருதுநகர் மாவட்ட காவல் துறை, 2025 ஆம் ஆண்டில் குற்றத் தடுப்பு, சட்ட அமலாக்கம் மற்றும் பொதுப் பாதுகாப்பு தொடர்பான நடவடிக்கைகள் குறித்த ஆண்டறிக்கையை 01.01.2026 அன்று வெளியிட்டுள்ளது.

அறிக்கையின் படி, கடந்த ஆண்டு மாவட்டத்தில் நடைபெற்ற குற்றங்களில் பெரும்பாலானவை கண்டறியப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன. சொத்து குற்றங்கள் தொடர்பாக கல்லறை (நிகூஷிணீஸ்மீ) மற்றும் இதர (ழிஷீஸீ நிகூஷிணீஸ்மீ) வகைகளில் நூற்றுக்கணக்கான வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, கோடிக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள சொத்துகள் மீட்கப்பட்டுள்ளன.

குற்றத் தடுப்பு நடவடிக்கைகளில், 420 திருட்டு வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளதுடன், 1,616 சிசிஜி கூஷி கேமராக்களின் உதவியால் பல குற்றங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. இது முந்தைய ஆண்டை விட சுமார் 16 சதவீத முன்னேற்றமாகும். மேலும், போதைப்பொருள் தடுப்பு நடவடிக்கைகளில் லட்சக்கணக்கான மதிப்புள்ள போதைப்பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

போக்சோ, உடல் குற்றங்கள், நீதி மன்ற வழக்குகள், தண்டனை விதிப்பு உள்ளிட்ட பல்வேறு பிரிவுகளில் காவல் துறை தீவிர நடவடிக்கை மேற்கொண்டதாக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. குழந்தைகள் மற்றும் பெண்கள் பாதுகாப்புக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு, குற்றங்களில் ஈடுபட்டவர்களுக்கு உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மாவட்டத்தில் சட்டம் ஞ் ஒழுங்கை நிலைநாட்ட பொதுமக்களின் ஒத்துழைப்பு முக்கியம் என காவல் துறை கேட்டுக்கொண்டுள்ளது. 2026 ஆம் ஆண்டிலும் குற்றங்களை கட்டுப்படுத்தி பாதுகாப்பான மாவட்டமாக உருவாக்க நடவடிக்கைகள் தொடரும் என காவல் துறை உறுதி தெரிவித்துள்ளது.



# கல்லல் விஷ்ராம் கல்வி அறிவாலய ஆண்டு விழா

சிவகங்கை, ஜன.4-

கல்லல் விஷ்ராம் கல்வி அறிவாலயத்தில் 18 ஆவது ஆண்டு விழா நடைபெற்றது. மாணவி லக் ஷிகா வரவேற்பு நடனம் ஆடினார். ஆசிரியை நாகரத்தினம் வரவேற்புரை வழங்கினார். விழாவிற்கு சிவகங்கை அரசு மருத்துவக் கல்லூரிநுண்கதிரியல் துறை முதுநிலை உள்ளிருப்பு மருத்துவர் யோகா தலைமை தாங்கினார். மத்திய அரசு வழக்கறிஞர்உறுதிமொழி ஆணையர் முருகேசன் மற்றும் சிவகங்கை அரு நடேசன் நடுநிலைப்பள்ளி ஆசிரியர் சாஸ்தா சுந்தரம் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டனர். இவ்விழாவில் சிவகங்கை எழுத்தாளர் மகாபிரபுவின் 13 ஆவது நூலான விருந்து கட்டுரை நூல் விருந்தினர்கள் முன்னிலையில் அறிமுகம் செய்யப்பட்டது. இந்நூலுக்கான மதிப்புரையை அழகப்பா பல்கலைக்கழக முதுநிலை வணிகவியல் மாணவர் நவீன் வழங்கினார். நாச்சியப்பன் சிவக்குமார் சக்திவேல் அண்ணாத்துரை கண்ணன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். கல்லல் முத்து டான்ஸ் அகாடமி மாணவிகளின் பரதநாட்டிய நிகழ்ச்சி நடைபெற்றது.

விருந்தினர்கள் மருத்துவர் யோகாவிற்கு சிறந்த மருத்துவர் விருது வழக்கறிஞர் முருகேசனுக்கு சிறந்த சமூக சேவகர்விருது, டைம்ஸ் ஆப் திருப்பத்தூர்நாளிதழ் நிறுவனர் தேவராஜனுக்கு சிறந்த சமூக சேவைக்கான விருது, ஆசிரியர் சாஸ்தா சுந்தரம், கல்லல் முருகப்பா மேல்நிலைப் பள்ளி ஆசிரியை பத்மா, குருந்தம்பட்டு ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி ஆசிரியை சித்ராதேவி, கல்லல் சாந்தி ராணி மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி ஆசிரியை ஹம்சத்வனி ஆகியோருக்கு மதிப்புமிகு ஆசிரியர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது

2025 ஆம் ஆண்டு அரசு பொதுத் தேர்வில் சாதனை படைத்த 10,11, 12 ஆம் வகுப்பு மாணவ மாணவிகள் சத்யா விஜயலட்சுமி வீரமணி உதய பிரகாஷ் ஆதித்யராஜ் சிவசங்கர் ராஜகணபதி சரவண பிரவின் கௌதம்தியானேஷ் சுபாஷ் சாஜித்கான் ஆகியோருக்கு பாராட்டுச் சான்றிதழும் பரிசும் வழங்கி யுகேஷ் ரமணா விஷ்வா வழங்கி கௌரவித்தனர். கோலப்போட்டியில் வெற்றி பெற்ற பெற்றோர்கள் மற்றும் மாணவிகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. கபடி கால்பந்து வாலிபால் கிரிக்கெட் மற்றும் ஓட்டப்பந்தயப் போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்கு சான்றிதழும் பரிசும் வழங்கப்பட்டது. விஷ்ராம் கல்வி அறிவாலயமாணவ மாணவிகளின் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றது. ஏராளமான மாணவ மாணவிகளும் பெற்றோர்களும் பொதுமக்களும் இவ்விழாவில் கலந்து கொண்டனர். ஆசிரியை சித்திரைச் செல்வி நன்றியுரை கூறினார்.

# நந்திவரம் கூடுவாஞ்சேரி வாக்காளர் சிறப்பு முகாமில் முதியவர்களுக்கு உதவிய நகர்மன்றத் தலைவர் பொதுமக்கள் நெகிழ்ச்சி

கூடுவாஞ்சேரி ஜன 4-

தமிழகம் முழுவதும் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல், நீக்கம் மற்றும் திருத்தங்கள் மேற்கொள்வதற்கான சிறப்பு முகாம்கள் சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் நடத்தப்பட்டு வருகின்றன. அதன் ஒரு பகுதியாக, செங்கல்பட்டு மாவட்டம் கூடுவாஞ்சேரி நகராட்சிக்கு உட்பட்ட பல்வேறு வாக்குச்சாவடி மையங்களில் இந்த முகாம்கள் தீவிரமாக நடைபெற்றன.

நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வசிக்கும் பொதுமக்கள், தங்களது விண்ணப்பங்களின் உண்மைத்தன்மை குறித்த கையொப்பம் பெறுவதற்காக கூடுவாஞ்சேரி நகராட்சி அலுவலகத்தில் காலை முதல் குவியத் தொடங்கினர். சுமார் 200க்கும் மேற்பட்ட பொதுமக்கள் திரண்டதால் நகராட்சி அலுவலக வளாகத்தில் பெரும் நெரிசல் ஏற்பட்டது.




நீண்ட வரிசையில் காத்திருந்த முதியவர்கள் மற்றும் பெண்கள், உட்கார இடமின்றியும் வெயிலின் தாக்கத்தினாலும் கடும் சிரமத்திற்கு உள்ளாகினர். நீண்ட நேரம் நிற்க முடியாமல் முதியவர்கள் தவிப்பதைக் கண்ட நந்திவரம்கூடுவாஞ்சேரி நகர்மன்றத் தலைவர் எம்கேடி.கார்த்திக் அவர்கள் உடனடியாக களத்தில் இறங்கினார்.

பொதுமக்களின் சிரமத்தைப் போக்க நகர்மன்றத் தலைவர் போர்க்கால அடிப்படையில் பின்வரும் வசதிகளைச் செய்து தந்தார்:

வெயிலின் தாக்கத்தைக் குறைக்க உடனடியாக அந்தப் பகுதியில் முதியவர்கள் அமர்ந்து செல்வதற்குத் தேவையான நாற்காலிகள் உடனடியாக வரவழைக்கப்பட்டன.

காத்திருந்த பொதுமக்கள் அனைவருக்கும் தேநீர் மற்றும் வாட்டர் பாட்டில் போன்ற வழங்கப்பட்டன.

நகர்மன்றத் தலைவரின் இந்தத் துரித நடவடிக்கையாலும் மனிதாபிமானத்தாலும் நெகிழ்ந்து போன பொதுமக்கள், அவருக்குக் கண்ணீர் மல்க நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டனர். மக்கள் பிரதிநிதியின் இந்த செயல் அப்பகுதி மக்களிடையே பெரும் வரவேற்பையும் பாராட்டையும் பெற்றுள்ளது.

"ஒரு மக்கள் பிரதிநிதி என்பவர் வெறும் அதிகார மையமாக மட்டுமல்லாமல், மக்களின் இக்கட்டான சூழலில் உடனடித் தீர்வாகவும் இருக்க வேண்டும் என்பதற்கு இந்தச் சம்பவம் ஒரு சிறந்த உதாரணமாக அமைந்தது. அதிகாரிகளுக்காகக் காத்திருந்த பொதுமக்களின் வலியைப் புரிந்து கொண்டு, நகர்மன்றத் தலைவர் எம்கேடிகார்த்திக் அவர்கள் செய்த மனிதாபிமான உதவிகள், கூடுவாஞ்சேரி மக்களிடையே நெகிழ்ச்சியையும், அவர் மீதான நம்பிக்கையையும் மேலும் அதிகரித்துள்ளது



# வானிலை முன்னறிவிப்பு: தமிழகத்தில் ஜன.9 வரை மிதமான மழைக்கு வாய்ப்பு

சென்னை, ஜன.4-

தமிழகத்தில் ஜன.5 முதல் 9ம் தேதி வரை ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக் குறிப்பு: தமிழகம், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில் நாளை (ஜன.4) வறண்ட வானிலை நிலவக்கூடும். அதிகாலை வேளையில் ஓரிரு இடங்களில் லேசான பனிமூட்டம் காணப்படும். தெற்கு கேரள கடலோரப் பகுதிகளை ஒட்டிய தென்கிழக்கு அரபிக்கடல் பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது.

தென்கிழக்கு மற்றும் அதனை ஒட்டிய தென்மேற்கு வங்கக்கடல் பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல மேலடுக்கு சுழற்சி நிலவுகிறது. இதன் காரணமாக 5 முதல் 7ம் தேதி வரை தமிழகத்தில் ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். 8ம் தேதி தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், 9ம் தேதி ஒருசில இடங்களிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நாளை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். அதிகாலை வேளையில் ஓரிரு இடங்களில் லேசான பனிமூட்டம் காணப்படும்.

தென் தமிழக கடலோரப் பகுதிகள், மன்னார் வளைகுடா மற்றும் குமரிக்கடல் பகுதிகளில் நாளை முதல் 7ம் தேதி வரை சூறாவளிக்காற்று மணிக்கு 45 முதல் 55 கிமீ வேகத்திலும், இடையிடையே 65 கிமீ வேகத்திலும் வீசக்கூடும். எனவே இப்பகுதிகளுக்கு மீனவர்கள் செல்ல வேண்டாம்.

தமிழகத்தில் இன்று காலை 8.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணி நேரத்தில் பதிவான மழை அளவுகளின்படி அதிகபட்சமாக திருநெல்வேலி மாவட்டம் நாலுமுக்கில் 5 செமீ, ஊத்து, காக்காச்சி, மாஞ்சோலையில் தலா 4 செமீ, நீலகிரி மாவட்டம் அழகரை எஸ்டேட், பில்லிமலை எஸ்டேட், திருநெல்வேலி மாவட்டம் கொடுமுடியாறு அணையில் தலா 3 செமீ மழை பதிவாகியுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது

# முதல்வரின் அறிவிப்பு ஏமாற்றம் அளிக்கிறது

தமிழ்நாடு முதலமைச்சர் அறிவித்துள்ள உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியம் திட்டத்தை வரவேற்கும் அதே நேரத்தில் ஆசிரியர்களிடம் பிடித்தம் செய்யப்படும் பங்களிப்பு தொகையை ஓய்வு பெறும் நாளில் திரும்ப வழங்க வழி வகை செய்யாதது ஏமாற்றம் அளிக்கிறது. அதே நேரத்தில் இந்த தொகையில் இருந்து முன்பணம் கடன் பெறும் வழிவகை செய்யும் வகையில் திருத்தம் மேற்கொள்ள வேண்டும் என தமிழக முதல்வரை ஆ.முத்துப்பாண்டியன் மாநில செயற்குழு உறுப்பினர் தமிழ்நாடு ஆரம்பப்பள்ளி ஆசிரியர் கூட்டணி கேட்டுக் கொண்டுள்ளார்.



# வாக்களிக்க ரூ.50 லட்சம் லஞ்சம்: கேரளாவில் தீவிர விசாரணை

திருவனந்தபுரம், ஜன.4-

கேரள மாநிலம் திருச்சூர் மாவட்டத்தில் உள்ள வடக்காஞ்சேரி பஞ்சாயத்து தேர்தலில் ஒரு தரப்புக்கு ஆதரவாக வாக்களிக்க சுயேச்சை உறுப்பினருக்கு ரூ.50 லட்சம் லஞ்சம் கொடுக்கப்பட்டதாக கூறப்படும் குற்றச்சாட்டு குறித்து ஊழல் தடுப்பு பிரிவு விசாரணையை தொடங்கியுள்ளது.

வடக்காஞ்சேரி பஞ்சாயத்துத் தலைவர் தேர்தலில் யுடிஎப் மற்றும் எல்டிஎப் ஆகிய இரு கூட்டணியும் தலா ஏழு இடங்களைப் பெற்று சமநிலையில் இருந்தது. இந்த சூழ்நிலையில், சுயேச்சை உறுப்பினரின் வாக்குக்கு மிகுந்த முக்கியத்துவம் ஏற்பட்டது.


இதையடுத்து, முஸ்லிம் லீக் ஆதரவு பெற்ற சுயேச்சை உறுப்பினர் இ.யு. ஜாஃபர், அந்த தேர்தலில் சிபிஎம் வேட்பாளருக்கு ஆதரவாக வாக்களிக்க தனக்கு ரூ.50 லட்சம் வழங்கப்பட்டதாகக் கூறும் ஆடியோ இணையத்தில் வேகமாக பரவியது. இதுகுறித்து லஞ்ச ஒழிப்பு அதிகாரிகள் தற்போது ஆரம்பகட்ட விசாரணையைத் தொடங்கியுள்ளனர்.

# குண்டடம் ஊராட்சி ஒன்றியம், உப்பாறு அணையிலிருந்து பாசனப் பகுதிகளுக்குட்பட்ட 6,060 ஏக்கர் விவசாய நிலங்கள் பாசனம் பெறும் வகையில் தண்ணீர் திறப்பு

திருப்பூர், ஜன.4-

மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்கள் மற்றும் மாண்புமிகு மனித வள மேலாண்மைத்துறை அமைச்சர் திருமதி என்.கயல்விழி செல்வராஜ் அவர்கள் ஆகியோர் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் மனிஷ் நாரணவரே இ.ஆ.ப. அவர்கள் தலைமையில், ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் திரு.கே.இ.பிரகாஷ் அவர்கள் முன்னிலையில் திருப்பூர் மாவட்டம், குண்டடம் ஊராட்சி ஒன்றியம். உப்பாறு அணையிலிருந்து வலது கரை மற்றும் இடது கரை கால்வாய்கள் மூலம் தாராபுரம் வட்டத்திற்குட்பட்ட 6,060 ஏக்கர் விவசாய நிலங்கள் பாசனம் பெறும் வகையில் தண்ணீர் திறந்து வைத்தார்கள்.





மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்கள் தெரிவித்தாவது, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆணைக்கிணங்க. திருப்பூர் மாவட்டம், குண்டடம் ஊராட்சி ஒன்றியம், உப்பாறு அணையிலிருந்து வலது கரை மற்றும் இடது கரை கால்வாய்கள் மூலம் தாராபுரம் வட்டத்திற்குட்பட்ட பாசனப் பகுதிகள் 6060 ஏக்கர் நிலங்கள் பாசனம் பெறும் வகையிலும் பொதுமக்கள் மற்றும் கால்நடைகளின் குடிநீர் தேவைக்காகவும் இன்று முதல் 23.01.2026 வரை 20 நாட்களுக்கு உரிய இடைவெளி விட்டு மொத்தம் 173.00 மில்லியன் கனஅடிக்கு மிகாமல் தேவைக்கேற்ப தண்ணீர் திறந்து விட அரசாணை வழங்கப்பட்டுள்ளது.

அதன்படி இன்றைய தினம், உப்பாறு அணையிலிருந்து வலது கரை மற்றும் இடது கரை கால்வாய்கள் மூலம் தண்ணீர் திறக்கப்படுகிறது. இது படிப்படியாக உயர்த்தப்பட்டு வலது கரையில் 72 கனஅடி/வினாடி என்ற அளவிற்கும், இடது கரையில் 105 கனஅடி/வினாடி என்ற அளவிற்கும் மொத்தமாக 177 கனஅடி/வினாடி அளவில் தண்ணீர் திறக்கப்படுகிறது. இதனால், திருப்பூர் மாவட்டத்திலுள்ள தாராபுரம் வட்டத்திலுள்ள 6060 ஏக்கர் பாசன நிலங்கள், பொதுமக்கள் மற்றும் கால்நடைகளின் குடிநீர் தேவைக்கு பயனடையும் விவசாய பெருமக்கள் தண்ணீரை சிக்கனமாக உபயோகித்தும் நீர்வளத்துறைக்கு நீர்பங்கீட்டுப்பணிகளில் ஒத்துழைப்பு நல்க வேண்டியும் விவசாய பெருமக்கள் தண்ணீரை சிக்கனமாக உபயோகித்தும் இத்துறைக்கு நீர்பங்கீட்டுப்பணிகளில் ஒத்துழைப்பு நல்க வேண்டும்.

மேலும், உப்பாறு அணையின் முழு கொள்ளளவான 24 அடியில் தற்போது 13.60 அடி நீர்மட்டம் உள்ளது. அணையின் கொள்ளளவு இன்றைய நிலவரப்படி 222.75 மி.க.அடி தண்ணீர் உள்ளது. இவ்வாறு மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் திரு.மு.பெ. சாமிநாதன் அவர்கள் தெரிவித்தார்கள்.

இந்நிகழ்வில், திருப்பூர் மாநகராட்சி 4 ம் மண்டலத்தலைவர் திரு.பத்மநாபன். நீர்வளத்துறை கண்காணிப்பு பொறியாளர் திரு.கார்த்திகேயன் அவர்கள், நீர்வளத்துறை செயற்பொறியாளர் திரு பிரபாகரன், உதவி செயற்பொறியாளர்கள் திரு.பாபு. திரு.சபீஸ்வரன். உதவிப்பொறியாளர் திரு.விஜயசேகர். உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், விவசாய சங்க பிரதிநிதிகள், விவசாயிகள் மற்றும் தொடர்புடைய அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.



■ சிவகங்கை மாவட்டம் இளையான்குடி ஒன்றியம் வாக்காளர் சேர்ப்பு சிறப்பு முகாம்களில் நேற்று கண்ணமங்கலம், சிறுபாலை,புலியூர், அண்டக்குடி வாணி,இளமனூர்,குணப்பனேந்தல் பெரும்பச்சேரி, குமாரக்குறிச்சி, நகரகுடி ஆழியதுரை, தாயமங்கலம் நாகமுகுந்தன்குடி, மேலத்துறையூர் உள்ளிட்ட வாக்குச்சாவடிகளுக்கு ஒன்றியச்செயலர் சுப.மதியரசன், ஒன்றிய துணைச்செயலர் சிவனேசன், மானாமதுரை தொகுதி தகவல் தொழில் நுட்ப அணி கண்ணன், ஒன்றிய விவசாயஅணி நீலமேகம், இளைஞரணி துணை அமைப்பாளர்கள் மணி, துரைமுருகன் மற்றும் பாகமுகவர்கள் கலந்துகொண்டனர்.



# திருப்புவனம் அருகே முள்படுக்கையில் அருள்வாக்கு கூறிய பெண் சாமியார்!

திருப்புவனம்இ ஜன.4-

திருப்புவனம் அருகே 7 அடி உயர முள்படுக்கையில் படுத்து பெண் சாமியார் ஒருவர் அருள்வாக்கு கூறினார். சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் அருகே லாடனேந்தலில் பூங்காவனம் முத்துமாரியம்மன் கோயில் மண்டல பூஜை கார்த்திகை 1ம் தேதி தொடங்கியது.

இதையொட்டி, தினமும் முத்துமாரியம்மனுக்கு சிறப்பு பூஜைகள் நடைபெற்றன. கோயில் நிர்வாகியும் சாமியாருமான நாகராணி காப்புக்கட்டி விரதம் இருந்தார். நேற்று முன்தினம் 108 சங்காபிஷேகம் நடைபெற்றது.

நேற்று காலை மண்டல பூஜையையொட்டி, முத்துமாரியம்மனுக்கு சிறப்பு பூஜைகள், தீபாராதனை நடைபெற்றன. தொடர்ந்து கோயில் எதிரே குவித்து வைக்கப்பட்டிருந்த 7 அடி உயர கருவேலம், இலந்தை, கற்றாலை உள்ளிட்ட பல வகை தாவரங்களின் முள் படுக்கையில் சாமியார் நாகராணி படுத்து தவமிருந்தார்.

அப்போது அங்கு கூடிய பக்தர்களுக்கு அருள்வாக்கு கூறினார். தொடர்ந்து அன்னதானம் நடைபெற்றது. மதுரை, சிவகங்கை, ராமநாதபுரம், விருதுநகர் உள்ளிட்ட மாவட்டங்களில் இருந்து ஏராளமான பக்தர்கள் வந்திருந்தனர்.

# சுசீந்திரம் கோயில் மார்கழி தேரோட்டத்தில் அமைச்சர் சேகர்பாபுவுக்கு எதிராக கோஷம்!

நாகர்கோவில், ஜன.4-

சுசீந்திரம் தாணுமாலய சுவாமி கோயில் மார்கழி திருவிழா தேரோட்டத்தை தொடங்கி வைக்க வந்த, இந்து அறநிலையத் துறை அமைச்சர் சேகர்பாபுவுக்கு எதிராக பக்தர்கள் கோஷமிட்டதால் பரபரப்பு நிலவியது.





கன்னியாகுமரி மாவட்டத்தில் பிரசித்திபெற்ற சுசீந்திரம் தாணுமாலய சுவாமி கோயில் 10 நாள் மார்கழி திருவிழா கடந்த 25ம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கி நடைபெற்று வருகிறது. தேரோட்டம் நேற்று நடைபெற்றது. கன்னியாகுமரி மாவட்டத்துக்கு உள்ளூர் விடுமுறை அளிக்கப்பட்டிருந்தது.

இதனால், நேற்று அதிகாலையில் இருந்து சுசீந்திரம் தாணுமாலய சுவாமி கோயிலில் பக்தர்கள் கூட்டம் அலைமோதியது. இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் சேகர்பாபு, தேரை வடம் பிடித்து இழுத்து தேரோட்டத்தை தொடங்கி வைப்பதாக இருந்தது.

காலை 9.15 மணிக்கு பால்வளத்துறை அமைச்சர் மனோதங்கராஜ், உணவு ஆணையத் தலைவர் சுரேஷ்ராஜன், மாவட்ட ஆட்சியர் அழகுமீனா, விஜய் வசந்த் எம்.பி. மற்றும் பிரமுகர்கள் வந்திருந்தனர்.

தேருக்கான பூஜை மற்றும் தீபாராதனை நிகழ்ச்சிகள் நடைபெற்று கொண்டிருந்தன. தேரை வடம்பிடித்து இழுக்க ஆயிரக்கணக்கான பக்தர்கள் காத்திருந்தனர். காலை 9.35 மணியளவில் அமைச்சர் சேகர்பாபு தேரின் அருகே வந்தபோது, அங்கு நின்ற இந்து அமைப்பினரும், பக்தர்களும் 'பாரத் மாதாக்கி ஜே...' என உரக்க கோஷமிட்டனர்.

தொடர்ச்சியாக அவர்கள் கோஷமிட்டதால், அமைச்சர் சேகர்பாபு சற்று கோபத்துடன் பக்தர்களை கடிந்து கொண்டார். இதனால், அமைச்சர் சேகர்பாபுவின் பெயரைக் கூறி அவருக்கு எதிராக அங்கு நின்றவர்கள் கோஷம் எழுப்பினர். இதனால் பரபரப்பு நிலவியது. பிரமுகர்கள் அதிர்ச்சியடைந்தனர்.

அமைச்சர்கள் சேகர்பாபு, மனோதங்கராஜ் மற்றும் பிரமுகர்கள் தேரின் அருகே நகர்ந்தனர். அப்போதும் எதிர்ப்பு கோஷம் எழுந்ததால் பரபரப்பு நிலவியது. அதன் பின்னர், தேரை வடம் பிடித்து இழுத்து அவர்கள் தேரோட்டத்தை தொடங்கி வைத்தனர். இக்காட்சிகள் அடங்கிய வீடியோ நேற்று சமூக வலைத்தளங்களில் வைரலாகி பரபரப்பை ஏற்படுத்தியது.

பெரிய தேரில் தாணுமாலய சுவாமி மற்றும் அம்பாள், அம்மன் தேரில் அறம் வளர்த்த நாயகி அம்மன், பிள்ளையார் தேரில் விநாயகர் ஆகியோர் ரத வீதிகளில் வலம் வந்தனர். தேரோட்டத்தை முன்னிட்டு, நாகர்கோவில் சுசீந்திரம் கன்னியாகுமரி தேசிய நெடுஞ்சாலையில் கடும் போக்குரத்து நெரிசல் ஏற்பட்டது.

# வெனிசுலா அதிபரை கைது செய்து நாடு கடத்திவிட்டோம்: ட்ரம்ப் அறிவிப்பு

வாஷிங்டன், ஜன.4-

வெனிசுலா அதிபர் நிக்கோலஸ் மதுரோ கைது செய்யப்பட்டு நாடு கடத்தப்பட்டுள்ளார் என்று அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் தெரிவித்துள்ளார். வெனிசுலா மீது அமெரிக்கப் படைகள் இன்று மிகப் பெரிய தாக்குதல் நடத்தியதை உறுதிப்படுத்திய பின்னர் அவர் இந்த அறிவிப்பை வெளியிட்டார்.

இதுகுறித்து சமூக ஊடகத்தில் ட்ரம்ப் வெளியிட்ட பதிவில், "வெனிசுலா மற்றும் அதன் தலைவர் அதிபர் நிக்கோலஸ் மதுரோவுக்கு எதிராக ஒரு பெரிய அளவிலான தாக்குதலை அமெரிக்கா வெற்றிகரமாக நடத்தியுள்ளது. அமெரிக்க சட்ட அமலாக்கத் துறையுடன் இணைந்து நடத்தப்பட்ட இந்த நடவடிக்கையில் மதுரோவும், அவரின் மனைவியும் கைது செய்யப்பட்டு நாடு கடத்தப்பட்டனர்' என அறிவித்தார்.



மதுரோ கைது செய்யப்பட்டதாக ட்ரம்ப் அறிவித்த நிலையில், "வெனிசுலா மீது அமெரிக்கா ஒரு மிகப் பெரிய அளவிலான தாக்குதலை நடத்தியதால், அதிபர் நிக்கோலஸ் மதுரோவின் இருப்பிடம் குறித்து தகவல் தெரியவில்லை" என்று வெனிசுலா துணை அதிபர் தெரிவித்துள்ளார்.

சனிக்கிழமை அதிகாலையில் நடந்த தொடர் தாக்குதல்களில் குடியிருப்புப் பகுதிகளை அமெரிக்கா தாக்கியதாக வெனிசுலா குற்றம் சாட்டியுள்ளது. இது குறித்து கருத்து தெரிவித்த வெனிசுலாவின் பாதுகாப்பு அமைச்சர் விளாடிமிர் பட்ரினோ லோபஸ், "அமெரிக்கப் படைகள் எங்கள் மண்ணை அவமதித்துள்ளன.

போர் ஹெலிகாப்டர்களிலிருந்து ஏவப்பட்ட ஏவுகணைகள் மற்றும் ராக்கெட்டுகளைப் பயன்படுத்தி, வெனிசுலாவில் பொதுமக்கள் வசிக்கும் குடியிருப்புப் பகுதிகள் மீது தாக்குதல் நடத்தும் அளவுக்குச் சென்றுள்ளன. எங்கள் பாதுகாப்புக்காக அனைத்து தரை, வான், கடற்படை மற்றும் ஏவுகணைத் திறன்களை பயன்படுத்துவோம்" என்றார்.

மதுரோவைக் கைது செய்ததாக ட்ரம்ப் கூறியதைத் தொடர்ந்து, "வெனிசுலாவுக்கு ஒரு புதிய விடியல். கொடுங்கோலன் போய்விட்டார். இப்போது அவர் இறுதியாக தனது குற்றங்களுக்காக நீதியை எதிர்கொள்வார்" என்று அமெரிக்க வெளியுறவுத் துறை துணைச் செயலாளர் கிறிஸ்டோபர் லாண்டாவ் தெரிவித்தார்.

முன்னதாக, இன்று (சனிக்கிழமை) அதிகாலையில் வெனிசுலாவின் தலைநகர் கராகஸில் ஏழு குண்டுவெடிப்புச் சத்தங்கள் கேட்டன. மேலும் தாழ்வாகப் பறந்தபடி விமானங்கள் நகரைச் சுற்றி வந்தன. இதனையடுத்து அமெரிக்கா பொதுமக்களின் வசிப்பிடங்கள் மற்றும் ராணுவத் தளங்கள் மீது தாக்குதல் நடத்தியதாக மடுரோ அரசாங்கம் குற்றம் சாட்டியது.

கொலம்பியாவில் அலர்ட்: அமெரிக்கத் தாக்குதல்களைத் தொடர்ந்து வெனிசுலா எல்லையில் தங்கள் நாட்டு படைகள் நிறுத்தப்பட்டதாக கொலம்பிய அதிபர் குஸ்டாவோ பெட்ரோ தெரிவித்தார்.

இதுபற்றி கருத்து தெரிவித்த பெட்ரோ, "இப்போது வெனிசுலா எல்லையில் ராணுவப் படைகளை நிறுத்த உத்தரவிட்டுள்ளேன். அமெரிக்காவின் இந்த நடவடிக்கை லத்தீன் அமெரிக்காவின் இறையாண்மை மீதான தாக்குதல். இவை ஒரு மனிதாபிமான நெருக்கடியில் முடிவடையும்" என்று கூறினார்.

பின்புலம் என்ன? அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப், வெனிசுலா அதிபர் நிக்கோலஸ் மதுரோவை பதவி விலகுமாறு பலமுறை எச்சரித்து வந்தார். அமெரிக்காவுக்குள் ஃபெண்டானில் போதைப் பொருள் ஊடுருவ வெனிசுலா அதிபரே காரணம் என்று குற்றஞ் சாட்டி வந்தார். அமெரிக்கா மீது வெனிசுலா 'போதைப் பொருள் பயங்கரவாதம்' நிகழ்த்துவதாகக் குற்றஞ் சாட்டினார். மேலும், வெனிசுலாவுக்கு பொருளாதாரத் தடைகள் விதித்ததோடு, அதன் கடற்பரப்புக்குள் எண்ணெய்க் கப்பல்கள் போக்குவரத்தையும் முடக்கிவைத்துள்ளார்.

கடந்த ஆகஸ்ட் மாதம் முதலே கரீபியன் கடற்பகுதியில் அமெரிக்க கடற்படைக் கப்பல்கள் ரோந்து, கண்காணிப்பில் தீவிரமாக ஈடுபடுவதோடு, சில போர்க் கப்பல்களும் நிலை நிறுத்தப்பட்டுள்ளன. இதனிடையே, அமெரிக்கா முன்வைக்கும் போதைப் பொருள் கடத்தல் குற்றச்சாட்டு தொடர்பாக விரிவான ஆலோசனைக்கு தயாராக இருப்பதாகவும், அதன் அடிப்படையில் ஒப்பந்தத்தை எட்ட விரும்புவதாகவும் கூட வெனிசுலா அரசு பகிரங்கமாக அறிவித்திருந்தது கவனிக்கத்தக்கது.

# குலசேகரன்பட்டினம் அருகே மண்ணில் புதையுண்டு காணப்படும் நீண்ட ஆயுள் கொண்ட 'ஆயி' மரம்!

தூத்துக்குடி, ஜன.4-

குலசேகரன்பட்டினம் அருகே நீண்ட ஆயுள் கொண்ட 'ஆயி' மரம் மண்ணில் புதையுண்ட நிலையில் காணப்படுகிறது. இந்த பகுதியில் ஆய்வு நடத்தினால் புவியியல் மாற்றத்தின் காலகட்டம் குறித்த விவரங்களை அறியலாம் என தொல்லியல் ஆர்வலர்கள் தெரிவித்துள்ளனர்.



இதுகுறித்து தூத்துக்குடியை சேர்ந்த வரலாறு மற்றும் தொல்லியல் ஆர்வலர் பெ.ராஜேஷ் செல்வரதி கூறியதாவது: 'ஆயி' மரம் என்பது பொதுவாக ஹோலோப்டிலியா இன்டெக்ரிபோலியா (Holoptelea integrifolia) என்ற தாவரவியல் பெயரால் அறியப்படும் ஒரு மர வகையை சேர்ந்தது.

இது தமிழ்நாட்டில் ஆயா மரம், ஆவு மரம், ஆமிலி, தம்பச்சி போன்ற வேறு பெயர்களிலும் அழைக்கப்படுகிறது. இம்மரம் சரியான சூழ்நிலையில் நூறு அடி உயரம் வரை கூட வளரக்கூடியது. ஆயி மரம் பல நூறு ஆண்டுகள் வாழக்கூடியது. இதன் சரியான ஆயுட்காலம் குறிப்பிட்ட சுற்றுச்சூழல் நிலைமைகளைப் பொறுத்து மாறுபடும்.

ஆனால் பொதுவாக இது ஒரு நீண்ட காலம் வாழும் மரமாகக் கருதப்படுகிறது, புகை உறிஞ்சும் திறன் கொண்ட ஒரு சூழல் காப்பு மரமாகவும் பயன்படுகிறது. ஆரம்பத்தில் மெதுவாக வளர்ந்தாலும், முதிர்ச்சியடைந்த பிறகு இதன் உயரம் 50 60 அடி அல்லது அதற்கும் அதிகமாக இருக்கும். இது ஒரு உயரமான, மெலிந்த மரமாகும்.

குலசேகரன்பட்டினத்துக்கு மேற்கு பகுதியில் உள்ள தீதத்தாபுரம் (ஆதி அய்யா குறிச்சி) கிராமத்தில் உள்ள மிக பழமையான பொன் அய்யன் (குளத்துக்கரை அய்யன்) ஆலய பகுதியில் ஆயி மரம் காணப்படுகிறது.

சுமார் 60 முதல் 100 அடி வரை வளரக்கூடிய இந்த ஆயி மரம் தற்போது மூன்றில் இரண்டு பங்கு மண்ணில் புதையுண்டு காணப்படுகிறது. இந்த பகுதியில் முறையாக ஆய்வுகள் செய்தால் புவியியல் மாற்றத்தின் காலகட்டம் குறித்த விவரங்களை அறியலாம் என்றார் அவர்.



# "தாய் மண்ணை மீட்ட முதல் இந்தியப் பெண் போராளி" வேலு நாச்சியார் சிலைக்கு விஜய் மரியாதை!

"சென்னை, ஜன.4-

"ஆயுதம் ஏந்திப் போராடி தாய் மண்ணை மீட்ட முதல் இந்தியப் பெண் போராளி" என்று புகழாரம் சூட்டியுள்ள தவெக தலைவர் விஜய், வேலு நாச்சியாரின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், 'விடுதலைப் போராட்டத்தில் ஆங்கிலேயர்களை எதிர்த்து ஆயுதம் ஏந்திப் போராடி, தாய் மண்ணை மீட்ட முதல் இந்தியப் பெண் போராளி. சமூக சமய நல்லிணக்கத்துக்கு எடுத்துக்காட்டாகத் திகழ்ந்த எழுச்சிக் கனல்.

எம் கொள்கைத் தலைவர், வீரமங்கை ராணி வேலு நாச்சியாரின் பிறந்தநாளை முன்னிட்டு, சென்னையில் கழகத்தின் தலைமை நிலையச் செயலகத்தில் உள்ள அவரது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினேன்.

தமிழ் மண்ணுக்குப் பெருமை சேர்த்த வீரமங்கை ராணி வேலு நாச்சியார் வழியில், மக்கள் விரோத ஆட்சியாளர்களை விரட்டி, மக்கள் விரும்பும் மக்களாட்சியை அமைக்க உறுதியேற்போம்' எனத் தெரிவித்தார்.

# மணிமுத்தாறு, குற்றாலம் அருவிகளில் வெள்ளப் பெருக்கு மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதியில் பலத்த மழை

திருநெல்வேலி, ஜன,4-

திருநெல்வேலி மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக மழை ஓய்ந்திருந்த நிலையில் நேற்று முன்தினம் இரவில் மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதி, அணைப் பகுதிகள் மற்றும் சமவெளி பகுதிகளில் பரவலாக பலத்த மழை பெய்தது.



நேற்று காலை 8 மணி வரையிலான 24 மணிநேரத்தில் பல்வேறு இடங்களில் பதிவான மழையளவு (மி.மீட்டரில்): அம்பாசமுத்திரம் 94, சேரன்மகாதேவி 104.20, மணிமுத்தாறு 27.40, நாங்குநேரி 40, பாளையங்கோட்டை 5.4, பாபநாசம் 32, ராதாபுரம் 5, திருநெல்வேலி 9.6, சேர்வலாறு அணை 91, கன்னடியன் அணைக்கட்டு 51.40, களக்காடு 48.40, கொடுமுடியாறு அணை 14, மூலைக்கரைப்பட்டி 40, நம்பியாறு அணை 9, மாஞ்சோலை 92, காக்காச்சி 79, நாலுமுக்கு 52, ஊத்து 45.

143 அடி உச்சநீர்மட்டம் கொண்ட பாபநாசம் அணை நீர்மட்டம் 124.20 அடியாக இருந்தது. அணைக்கு விநாடிக்கு 956 கனஅடி தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து 1,250 கனஅடி தண்ணீர் திறந்துவிடப் பட்டிருந்தது. 118 அடி உச்சநீர்மட்டம் கொண்ட மணிமுத்தாறு அணை நீர்மட்டம் 106.46 அடியாக இருந்தது. அணைக்கு விநாடிக்கு 465 கனஅடி தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து 460 கனஅடி தண்ணீர் திறந்துவிடப் பட்டிருந்தது.

களக்காடு அருகே திருக்குறுங்குடி மலை நம்பிகோயில் ஆற்றில் நீர்வரத்து அதிகரித்துள்ளது. இதனால் பக்தர்கள் மற்றும் சுற்றுலா பயணிகள் கோயிலுக்கு செல்லவும், குளிக்கவும் வனத் துறை தடைவிதித்திருந்தது. இதுபோல் களக்காடு தலையணையிலும் குளிக்க தடை விதிக்கப்பட்டுள்ளது. மணிமுத்தாறு அருவியில் வெள்ளப்பெருக்கு காரணமாக அருவியில் சுற்றுலா பயணிகள் குளிக்க தடை விதிக்கப் பட்டிருந்தது.

தென்காசி: தென்காசி மாவட்டத்தில் நேற்று முன்தினம் இரவு பெரும்பாலான பகுதிகளில் பலத்த மழை பெய்தது. மேற்குத் தொடர்ச்சி மலையையொட்டிய பகுதிகளில் நேற்று காலை வரை விடிய விடிய கனமழை கொட்டித் தீர்த்தது. நேற்று காலை வரையிலான 24 மணி நேரத்தில் கடனாநதி அணையில் 239 மி.மீ., சிவகிரியில் 171 மி.மீ., ராமநதி அணையில் 120 மி.மீ., ஆய்க்குடியில் 103 மி.மீ., கருப்பாநதி அணையில் 77.50 மி.மீ., தென்காசியில் 50 மி.மீ., அடவிநயினார் அணையில் 12 மி.மீ. மழை பதிவானது.

கடனாநதி அணை நீர்மட்டம் நேற்று முன்தினம் 77.70 அடியாக இருந்த நிலையில், ஒரே நாள் மழையில் அணை நிரம்பியது. 85 அடி உயரம் உள்ள கடனாநதி அணையில் நீர்மட்டம் 84 அடியில் நிலைநிறுத்தப்பட்டு, அணைக்கு வரும் நீர் அப்படியே உபரியாக வெளியேற்றப்பட்டது. இதனால், கரையோர பகுதி மக்கள் பாதுகாப்பாக இருக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது.

ராமநதி அணை நீர்மட்டம் 8 அடி உயர்ந்து 72.75 அடியாக இருந்தது. கருப்பாநதி அணை நீர்மட்டம் 54.30 அடியாகவும், அடவிநயினார் அணை நீர்மட்டம் 115.50 அடியாகவும் உள்ளது. குண்டாறு அணை முழு கொள்ளளவில் உள்ளது.

குற்றாலம் அருவிகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. இதனால் பாதுகாப்பு கருதி அருவிகளில் குளிக்க தடை விதிக்கப்பட்டது. பழைய குற்றாலத்தில் கடந்த அக்டோபர் மாதம் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கில் அருவிப் பகுதிகளில் பலத்த சேதம் ஏற்பட்டது.

இதனால் கடந்த 2 மாதங்களுக்கு மேலாக அந்த அருவியில் குளிக்க தடை நீடிக்கிறது. இந்நிலையில், நேற்று முன்தினம் ஏற்பட்ட வெள்ளத்தில் தடுப்புக் கம்பிகள் உள்ளிட்டவை மீண்டும் சேதமடைந்தன.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161